ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்ய தர்மம்.

இப்பிரபஞ்சம் சர்வசக்தி ஸம்பன்னனான பரமேசுவரனால் விருஷ்டிக்கப்படாமல் தானாகவே உண்டாய் விடவில்லை. ஆனால் இந்த வித்தாந்தத்தை ஸ்வபாவவாதிகள் அங்கீகரிக்கமாட்டார்கள். ஆயினும் பிரமாண வாயிலாக அவர்கள் இதை மறுக்கமுடியாது. அங்ஙனமாயின் ஸ்வபாவம் என்பதையே வித்தாந்தவாதிகள் அங்கீகரிக்கவில்லையோ என்றால் அங்கீகரிக்காமலில்லை. ஏதோ ஒருவிடத்தில் ஸ்வபாவவாதத்தை அங்கீகரித்ததற்காக எவ்விடத்திலுமே இதை ஸ்தாபித்துவிட முடியுமா? எத்தேசத்திலும் எக்காலத்திலும் எக்காரணத்தாலும் மாறுதலையடையாததே ஸ்வபாவமாகும். உதாரணமாக அக்னிக்கு சுடுகையும், சூரியனுக்குப் பிரகாசமும், ஜலத்திற்கு குளிர்ச்சியும், போல் அந்தந்த வஸ்துக்களுக்கும், ஓர் ஸ்வபாவமுண்டு. எது தேசபேதத்தாலும், காலபேதத்தாலும், காரணவசத்தாலும், மாறுபடுமோ அது ஸ்வபாவமாகாது. உதாரணமாக ஜலத்தில் அக்னிசம்பந்த நிமித்தமாக சுடுகை அறியப்படின் அது ஜலத்தின் ஸ்வபாவமாகாது, இதுபோல் எல்லாவற்றிலும் காண்க எவ்விடத்திலுமே ஸ்வபாவவாதத்தை யாசிரயிக்கும் பக்ஷத்தில் ஜலத்திற்கு குளிர்ச்சியும், சுடுகையும், ஸ்வபாவமென்றாய் விடும். பரஸ்பரம்விரோதப்படும் தர்மங்கள் ஸ்வபாவமாக முடியாது. அன்றியும் ஸ்வபாவமென்றால் எப்பொழுதுமே உள்ளதாயிருக்க வேண்டும். நெல், பயிர், எள்ளு, கொள்ளு முதலிய பீஜங்(விதை)களுக்கு முளைக்கும் தன்மை ஸ்வபாவமென்றால் அவை குதிரிலும் சாக்கிலுமிருக்கும் பொழுதே முளைத்துக்கொண்டே இருக்கவேண்டும். வயல், தண்ணீர் முதலிய காரியங்களை அபேக்ஷிக்காது. வேறுகாரணங்களை அபேக்ஷித்து, நேரிடுவது ஸ்வபாவமாகாது. இவ்வாறு ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வொரு ஸ்வபாவமும், தேசகாலநியத்தவசத்தால் மாறுதலுமிருப்பதுபோல் இந்த ப்ரபஞ்சத்திற்கும், தர்மத்திலேயே நிலைத்திருப்பது ஸ்வபாவமாம். அதை விட்டு மாறுவது ஏதோகாரணவசத்தால் நேர்ந்துவிடுகிறது. ஆகவே தற்போது தர்மம் தலைகீழாகப் புரண்டு தரித்திர தாமோதரனாகத் தத்தளித்துக்கொண்டிருப்பதும் காலத்திற்கேற்ப உடன்பிறந்த இயற்கைதானென்று சில மேதாவிகள், அபிப்பிராயப்படுகிறார்கள். அது அப்படியன்று, தர்மத்தையே ஆச்ரயித்திருப்பதும், தர்மத்தைத் தவறி நடப்பதும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதால் ஸஹஜமான ஸ்வபாவமாகாது. தற்போது பிரபஞ்சத்தாருக்குத் தர்மருசி மாறி அதர்மப்பற்றேற்பட்டதுஸ்வபாவத்தாலல்ல.கலிகாலக்கொடுமையாலும்புறநாட்டாரிடின் கெட்டபழக்கத்தாலும்,நேர்ந்த ஆபத்தாமிது ஆகையால்தீரர்களான மஹாபுருஷர்கள் இவ்வாபத்திற்கு இடங்கொடாமல் இயற்கையாயமைந்துள்ள தர்மத்தையே கைப்பற்றி விதவாவிவாஹஸபையார்,பிரௌடாவிவாக சபையார், தார்மிகளாறு கோஷ்டியிற் புகுந்து நம் ஆர்யச்சிறுவர் மனதைக் கலைத்துவிடாமல் புனிதமான பிராசீன ஸம்பிரதாயப்படியே யாவரும் நடந்து சுகத்தையடையுமாறு செய்வார்களாக.

சுபம்!

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

பிரமோத-ஸூ ஐப்பிசி-மீ ௭௨

## ஆர்யாசாரரஹஸ்யம்,

ஆர்யர்களெனப்படும் வைதிகர்களான மூன்று வர்ணத்தார்களின் ஆசாரங்களில் அனேக ரஹஸ்யமுண்டு. இதை ஸ்தூல திருஷ்டிகள் அறியார்கள். இவ்வறியாமை வெளிப்படாவண்ணம் அவர்கள் மௌனமாயிருப்பதுமில்லை. ஸர்வக்ஞர்கள்போல் சிற்சில வாக்கியாபாஸங்களையும், யுக்தியாபாஸங்களையும் வைத்துக்கொண்டுஜகத்தையே புறட்டிவிடப்பார்க்கிறார்கள். நிவர்த்திமார்க்கத்தில் நம் முன்னோர்கள் கண்டறிந்த உண்மையான ரஹஸ்யங்கள் பல. பிரவிருத்திமார்க்கத்திலும் ஸூக்ஷ்மமான ரஹஸ்யத்தை வைத்திருக்கிறார்கள். சாஸ்திரீயவழியிலீடுபட்ட மாதாபிதாக்களின் பரஸ்பர அனுக்ரஹவசத்தாலேற்படும் புத்திரஸந்தானவிஷயத்தில் பசு பக்ஷி முதலியவைகள் ஸந்ததி விருத்திசெய்வதுபோலல்ல நம் பெரியோர்கள் செய்வது தன்னைப்போலவே தங்கள் ஸந்ததியும் வைதிகாபிமானத்துடன் ஸநாதனதர்மத்திலீடுபட்டு மோக்ஷபரியந்தமான புருஷார்த்தங்களையடைந்து பேரானந்தம் பெற வேண்டுமென்றே பீஜாவஸ்தை முதற்கொண்டே ஸம்ஸ்காரங்களை செய்வித்திருக்கிறார்கள்; அவைதான் கர்ப்பாதானாதிகளெனப்படும். அதனால் ஸந்ததிசுத்தியுண்டாகின்றது. உதாரணமாக ஜாதகர்மமெனப்படும் ஓர் ஸம்ஸ்காரத்தின் ரகஸ்யத்தை ஆராய்ச்சி செய்துபார்ப்போம். ஜாதகர்மமென்பது புத்திரன் பிறந்தவுடன் தொப்புள்கொடி அறுப்பதற்குமுன் பிதாவினால் செய்யப்படும் ஸம்ஸ்காரம். பிறந்த குழந்தைக்கு இது நான்காவது ஸம்ஸ்காரமாகும். புத்திரன் பிறந்தானென்று கேட்டவுடன் தகப்பன் மனமகிழ்ந்து பித்ருக்களின் திருப்திக்காக பெரியதோர் தீர்த்தத்தில் அலைமோத ஸ்னானம்செய்து சுத்தனாய் அக்குழந்தையைத் தாயின் மடியினின்று எடுத்துக்கொண்டு கால்முதல் தலைவரையில் தடவிக்

கொடுக்கவேண்டும். அதனால் பிதாவின் மனமானது ஸ்னேஹத்தால் குழந்தையையே நாடும். அப்பொழுது குழந்தையின் மனம் பிதாவின் மனதோடொருமைப்படும், தகப்பனது மனதின் குணங்களையடையும். அங்ஙனமே சரீரஸ்பரிசத்தால் குழந்தையின் சரீரமும் பிதாவின் சரீரத்திற்கு சமானமாகும். பாவனையின்றித் தடவிக்கொடுப்பதைக்காட்டிலும் பாவனையுடன் தடவிக்கொடுப்பதால் சக்தி மிகவுண்டாகும். அச்சிசுவைத் தானாகவே பாவிக்க வேண்டுமென்று விதிக்கின்ற மந்திரங்கள் அங்கு உபயோகிக்கப் படுகின்றன.

அதில்—"ஒவ்வொரு அங்கத்தினின்றும், ஹ்ருதயத்தினின்றும் பிறக்கின்றாய். ஆத்துமாவே புத்திரனாகிறாய், நூறுவருஷம் ஜீவித்திருப்பாயாக" என்ற பொருள் விளங்குகின்றது. இதனால் புத்திரனுண்டாகும்பொழுது ஒரு ரஹசியம் வெளியாகிறது. அதாவது— தகப்பனுக்கும் பிள்ளைக்கும் உண்டான சம்பந்தம் எழு தலைமுறைவரை விடுகிறதில்லை. அதிலும் மூன்று தலைமுறை வரை முக்கியமாம். எட்டாவது முதல் 14-தலைமுறை வரை அந்த சம்பந்தம் கொஞ்சம் குறையும் 21.வது தலை முறைவரை அதை விடக்குறையும். அதனாற்றான் எழு தலைமுறைவரை ஸபிண்டர்களெனப்படுகிறார்கள். ஒரே சரீரமுள்ளவர்களாமென அதன் கருத்து. பிறகு ஸமானோதகர்களெனப்படுவார்கள். பிறகு ஸகோத்திரர்களெனப்படுவார்கள். ஸகோத்திரத்தன்மையென்ற ஸம்பந்தம் பிரளயகாலம் வரை மாறாது. ஒரே கோத்திரமுடையவர்களுக்கு ஒரே விதமான சரீரமென்று ஏற்படுகின்றது. அதனாற்றான் ஸபிண்டர் ஸமானோதகர் இவர்களது பெண்ணை விவாஹம் செய்யக் கூடாது என்பதுபோல் ஸகோத்திரர்களுடைய பெண்களையும்மணம்புரியக்கூடாதென்றுசாஸ்திரம் விதிக்கின்றது. இந்த மாதிரி ஸம்பந்தம் அறிவில்லாததுகளான மிருகங்களுக்கில்லை. அதனாற்றான் பிறந்த கானையைத்தாயைப் புணர்ந்தாலும் இகழப்படுவதில்லை. ஆகவே அறிவு பொருந்திய மனிதர்கட்குத்தான் சரீரஸம்பந்தம் புத்திரர்களிடத்தில் ஸம்பவிக்கும். அதுவும் பெரும்பாலும் முகத்தின் ஸமமான உருவத்தால் நன்றாய் அறியக் கூடும். இதற்குக்காரணம் மந்திரங்களால் செய்யப்படும் ஸம்ஸ்காரங்களுடன் கூடின பாவனைதானென ஆன்றோர் கொள்கை இவ்விதம் தடவிக்கொடுப்பது முதலிய ஸம்ஸ்காரங்களைச்செய்

யின்றவன் பிதாவென்றும், செய்யத்தகுந்தவன் பிள்ளையென்றும் ஆர்யர்களின் ஸித்தாந்தம். ஸாக்ஷாத்தான சரீரஸம்பந்தத்தைவிடமந்திரஸம்ஸ்காரத்தினால்ஏற்பட்டஸம்பந்தம் சிறந்தது அதனாற்றான் ஸ்வீகாரம் செய்துகொள்ளப்பட்ட பையனுக்கு ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டவனது சரீரஸம்பந்தம் ஸாக்ஷாத்தாயில்லாவிடினும் இவ்விருவர்களுக்கும் பிதாபுத்திர ஸம்பந்தம் முக்கியமாகக் கருதப்படுகின்றது. இதற்குக் காரணம் மந்திரபூர்வகமாகச் செய்யப்படும் ஸம்ஸ்காரமேயாகும். பெற்றவனே ஸம்ஸ்காரம் செய்தவனுபின் முக்கிய பிதாவிலும் முக்கியனுவான். ஆகவே பாவனையோடு செய்த ஸம்ஸ்காரமே புத்திரனென்ற அபிமானத்தை உண்டுபண்ணுகின்றது. பிறந்தமாத்திரத்தால் அவ்வபிமானம் உண்டாகாது. அவ்வாறு மந்திரஸம்ஸ்காரம் சரியாக செய்யப்படாத விடங்களில் பிதா புத்திரர்களுக்கு விரோதமும் சில சம்பந்தங்களுள் விட்டுப்போவதும் காணப்படுகின்றது. இந்த ஸம்ஸ்காரம் முக்கியமாகையால் முதலில் பிறந்த குழந்தையை பிதா தடவிக்கொடுக்க வேண்டுமென்று சாஸ்திரம் விதிக்கின்றது இதைத்தற்காலத்திய நாகரீக வாஸனையுள்ளவர்கள்ஹேளனமாய் பேசுவார்கள். அன்றியும் தற்காலத்தில் ஸ்திரீகள் பர்த்தாவின் வீட்டில் பிரஸவிப்பது மிக அபூர்வமாகும். பெரும்பாலும் பிரஸவிக்கப் பெண்கள் பிறந்த வீட்டிற்கே போய்விடுவது வழக்கமாயிற்று. குழந்தை ஜனித்தால் பிதாவுக்கு அந்த சமாசாரம் சில நாள் கழித்தே தெரியும்படியாய் விடுகிறது. தெரிந்தாலும் வேறு கிராமத்திலிருப்பவர்களுக்கு தொப்புள்கொடியறுப்பதற்கு முன் வர முடிகிறதேயில்லை. புண்ணியாஹவாசனத்திற்கு ஸோமன் ஜோடிக்காக ஆசைப்பட்டு சிலர் குழந்தை பிறந்தவிடம் வந்தாலும், அப்பொழுதாவது அந்த ஜாதகர்மத்தைச் செய்வதில்லை, இப்படி மந்திரபூர்வகமான ஸம்பந்தம் முதலிலேயே ஏற்பட்ட தோஷத்தினாற்றான் சிலவிடங்களில் தகப்பனும் பிள்ளையும் சண்டைப்படுவதும் வழக்கத்தில் வந்துவிட்டதுபோலும். அதனால் இத்தகைய இத்தகைய அஸந்தர்ப்பம் நேரிடாவண்ணம் இதை வழக்கப்படி செய்யவேண்டியது அதில்; வெறுங்கையினால் தடவிக்கொடுத்தால் சரீரத்தின் வாதாதிதோஷத்துடன் கூடியதாகும். அப்படியாகாமல் அந்த தோஷத்தைப் போக்குவதற்கு, கல், பொன், இரும்பு இவைகளைச் சேர்த்து ஸ்பரிசிக்கவேண்டும்.

அதன் பயனைப்பற்றி—

अश्मा पित्तं शोधयति सुवर्णन्तु कफापहम् ।
अयो वातहरं नित्यं दोषसाम्यमतस्मृतम् ॥

"கல் பித்தத்தைப்போக்கும் சுவர்ணம் கபத்தை நீக்கும், இரும்பு வாதத்தையபஹரிக்கும்,இப்படி ஸ்பரிசிப்பதும்,உச்சிமுகருவதும், பிறகு தான் தொட்டு தாயின் ஸ்தனத்தைக்குழந்தைக்குப்பானம் செய்விப்பதும், தவிடு, கடுகு முதலியவற்றால் பிரஸவித்த இடத்திற்குப்புகையேற்றுவதும், முக்கூடுகள் கலந்து சாப்பிடச்செய்வதும் வேப்பிலை முதலியவைகளால் அவ்விடத்தைப் பாதுகாப்பது மாகிய பெரியோர்களான குலஸ்திரீகளால் வழக்கமாய்வந்த சில காரியங்களும் செய்யப்படும். அவை யாதெனில் வேப்பங்கொத்துகளால் தோரணம் கட்டுவதும், ஓர் கத்தியை எப்பொழும் வைப்பதும், இடைவிடாமல் அனலைக்காப்பாற்றுவதும், காலை மாலைகளில் புகையேற்றுவதும், பத்துநாள் வரையில் ஓர் குடத்தில் புதிதுபுதிதாய் ஜலத்தை தினந்தோறும் நிறப்புவதும், அதைப்பாதுகாப்பதும், கொஞ்சமாகக் கொட்டைமுத்துயெண்ணெயை வெற்றிலையில் தடவி அனலில் வாட்டிக் குழந்தையின் தலையில் தடவுவதும், ஜாதகர்மம் செய்தவுடன் தொப்புள்கொடியையறுப்பதும், இது போன்ற மற்ற ஆசாரங்களும் சாஸ்திரசம்பிரதாயங்களாம். அவரவர்களது கிருஹ்பத்திற் கூறியவாறு மந்திரஜபம், ஹோமம், தானம் இவைகளைச் செய்யவேண்டும். இதனால் திருஷ்டாதிருஷ்டங்களான அனேக பயன்களுண்டு. தவிடு, கடுகு இவைகளால் ஹோமம் செய்வதானல் ஆங்குள்ள துர்நாற்றம்போகும். அன்னையின் வயிற்றில் முத்திரக்குழிக்கருகாமையிலிருந்ததால் குழந்தையின் சரீரம் கொழகொழத்திருக்கும். அது நீங்கி குழந்தையின் சரீரம் முதிற்சியடைவதற்காக அங்கு இடைவிடாமல் ஜாதகாக்னியை வைத்துக்கொண்டு சூட்டைக் காப்பாற்றிவருகிறார்களாம். தங்கத்தையுரைத்துக் கலந்து தேனையும் கொஞ்சமாகச் சேர்த்து ஸ்தன்யத்தைப் பானம் பண்ணும்படி செய்வார்கள்.

स्तन्यं हिरण्यनिकषमिश्रं मधुपृषद्युतम् ।
प्रथमं प्राश्यते, प्राज्ञास्तन्मेधाजननं विदुः ॥

என்ற வசனப்படி அப்படிச் செய்வதற்கு மேதாஜனனம் என்று பெயராம். இதனால் அந்தக்குழந்தைப்பருவத்திலேயே குழந்தையின் மேதை (அறிவு) சுத்தி செய்யப்பட்டதாகிறது.

एवं जनितमेधस्य पितृसंस्कार भागिनः ।
शिशोश्शरीरभेदेऽपि पित्रैक्यं स्यात् स्वभावतः ॥

"இங்ஙனம் பிதா செய்த ஸம்ஸ்காரத்தால் மேதையுண்டாக்கப்பட்ட அந்த சிசுவிற்கு சரீரபேதமிருந்தாலும் இயற்கையாய் பிதாவோடு ஐக்கியமுண்டாம்" என்று அதன் பயன் கூறப்படுகின்றது.

ततः प्राप्तां पितुश्शक्तिं रक्षन्त्यः कुलपालिकाः ।
वृद्धा अरिष्टोपचारं विविधं कल्पयन्त्यमूः ॥

"அதன்பிறகு தகப்பனிடமிருந்துவந்த குழந்தையின் சக்தியைக் காப்பாற்ற பலவாறாகக் குலஸ்திரீகள் பிரஸவஅறைக்கு உபசாரம் செய்துவருவார்கள்" என்றபடி ஏழாவது தினத்திலோ ஒன்பதாவது தினத்திலோ மூன்று லோகங்களைச்சேர்த்துக் காப்புப் போடுவார்கள். அது சரீரத்தின் சக்தியை விருத்திசெய்யும். தாழங்கொத்தை அவ்விடத்தில் கட்டிவைப்பார்கள். அதனால் கெட்ட இரத்தம் சேர்ந்து கெட்டதாயிருக்கிற காற்று சுத்தியடையும். இவ்விதம் செய்யப்படும் ஜாதகர்மஸம்ஸ்காரத்திலிருந்து பிதா புத்ரர்களது சரீரஸம்பந்தம் இஹத்திலும்பரத்திலும் விட்டுப்போகாது. அதனாற்றான் இஹத்தில் பிதா செய்து பாக்கி விழுந்துபோன லௌகிகவைதிககார்யங்களை புத்திரன் செய்து பூர்த்திபண்ணுகிறான். அது பிதா செய்ததுபோலவேயாம். சிராத்தாதிகளால் பரலோகத்திலும் திருப்திசெய்விப்பான். அதற்காகத்தான் முக்யமாக ஸத்புத்திரனைப் பெரியோர்கள் விரும்பினார்களாம். அதற்காகவேதான் விவாஹத்தில் பிரௌடை, விதவை கூடாதென்று விலக்கி சுத்தமான குலத்தில் பாலிகையை விவாஹம் செய்து கொள்ளுகிறார்கள். அப்படியே யாவரும் செய்து க்ஷேமத்தை அடைவார்களாக, சுபம்.

பத்திராதிபர்,

# ஸ்கந்தஷஷ்டி.

பிரியவாசகர்களே!

ஸ்கந்தஷஷ்டி மஹாபுண்யகாலம் சமீபித்திருப்பதால் அதன் மஹிமையைக் கொஞ்சம் சொல்லத்தொடங்குகிறேன்—

ஸ்கந்தனுக்கு பிரியமானதிதியானதால் இதனை ஸ்கந்தஷஷ்டி என்று சொல்லுவது. ஸ்கந்தஷஷ்டியன்றுதான் பகவான் ஸுப்ரமண்யன் துஷ்டர்களாகிய சூரபத்மன் முதலிய அசுரர்களை நிக்ரஹம் செய்து தேவர்கள், மனுஷ்யர்கள், இவர்களுக்குக்ஷேமத்தை உண்டுபண்ணி, விஜயலக்ஷ்மியுடன் விளங்கினர். ஆகவே விஜய லக்ஷ்மியோடுகூடின வலலீகாந்தனை அந்ததினத்தில் பஜனம் பண்ணுபவர்களுக்கு மனோரதமனைத்துமதிவிரைவில் கைகூடுமென் பதில் ஐயமில்லை. உலகத்திலும் இவ்வழக்கம் உண்டல்லவா? எஜமானனுக்கு சந்தோஷம் வந்தகாலத்தில் சேவகர்களுடைய மனோரதமெளிதில் பூர்த்தியடைவதில்லையா? பகவான் ஸுப்ரமண்யன், தனது சத்யசங்கல்பஸ்பாவமஹிமையினுலேயே சூரபத்மாதிகளை பஸ்பம்பண்ணிவிடுவது முடியுமானாலும் அவர் அந்ததுஷ்ட அசுரர்களை நிக்ரஹிப்பதற்காக தவம் முதலியவைபுரிவதும் ஆயுதம் காலதேசவர்த்தமானங்களை அநுசரிப்பதும் லீலாமாத்திரமேயொழிய வேறல்ல.பக்தர்களுக்காக இவ்விதம் லீலைகளை குமாக்கடவுள் செய்கின்ருரென்றுதான் அர்த்தம். பொதுவாக ஷஷ்டிதினத்தில் சுப்ரமண்யக்கடவுளை யாவரும் பூஜிக்கவேண்டுமென்பது சாஸ்திர விஹிதமாயிருப்பினும் ஸ்கந்தஷஷ்டிதினத்தில் பூஜிப்பது மஹாபலனைத்தரும். ஸுப்ரமண்யக்கடவுளை 'ஸ்கந்தன்' என்றும், 'ஷண்முகனென்றும், கார்த்திகேயனென்றும், சரவணபவனென்றும், காங்கேயனென்றும், குமாரனென்றும், திருநாமமிட்டழைப்பது யாவருக்கும் ப்ரசித்தமே. இத்தகைய நாமங்களனைத்தும் அவருடைய வெகுவினோதமானதிவ்ய சரித்திரங்களையநுசரித்தே ஏற்பட்டனவையாகும். ஸுப்ரமண்யருடைய உத்பத்தி, வைபவம் பராக்ரமம் இவைகளெல்லாம் ஸர்வேஸ்வரனுக்கும் இல்லை என்று சொல்லலாமென்று எனை முப்பத்திமுக்கோடிதேவர்கள், ப்ரும்மா விஷ்ணு இவர்களுக்குச்சமமில்லை என்று சொல்லவும் வேண்டுமோ? ப்ரும்மாமுதலிய தேவர்கள் சூரபத்மன் முதலிய அசுரர்

களுடைய துன்பம்பொறுக்கமுடியாமல்ஸர்வேஸ்வானிடம்சென்று தமது துக்கத்தை முறையிடவே, அவர்களுடைய விண்ணப்பத்தை செவியுற்ற ஸர்வேஸ்வானும், நம்மால் அவ்வசுரர்களை நிக்ரஹிக்கமுடியாதென்று நினைத்து தனக்கு சமபராக்ரமும் அபாரமஹிமைவாய்ந்தவருமாகிய தேவசேனாபதியை சிருஷ்டித்தாரென்றல்லவா அவருடைய திவ்யசரித்திரம் கூறுகின்றது. இதுமாதிரி உத்பத்திக்ரமம் மற்ற தேவர்களுக்கு உண்டா? பரமசிவனுடைய வீர்யத்தை பார்வதிதேவியும் தமது கர்பத்தில் தரித்துக்கொள்ளமுடியாமல் பூமியில் விட்டுவிடவே அவ்வீர்யம் பூமிமுழுவதும் தங்கம், வெள்ளி, இரும்பு முதலிய சப்ததாதுக்களாக மாறிவிட்டதென்றும், பூமாதேவியாலும் அவ்வீர்யத்தை தரிக்கமுடியாமல்போனகாலத்தில் அக்னிபகவானும் அவராலும் முடியாதபோது அவ்வக்னிபகவான் கங்கையிலும், அந்த கங்கா ப்ரவாகத்தால் நாணல்காட்டிலுமாக அவருடைய வீர்யமானது நழுவி வந்து ஒரு ஸர்வாங்கசுந்தர திவ்யமங்களவிக்ரஹத்தோடு ஒரு குழந்தையாக விளங்கலாயிற்று. தேவசேனாபதியாக ஏற்படப்போகும் அக்குழந்தைக்கு ஸ்தன்யபானம் செய்விப்பதற்காக தேவர்கள் கிருத்திகாநக்ஷத்திர தேவதைகளை அனுப்பினார்கள். அவர்கள் ஆறு பேர்கள், ஆதலால் அவர்கள் நான் முந்தி நான் முந்தி என்று அக்குழந்தைக்கு ஸ்தன்யபானம் கொடுப்பதை அநேக சண்டை நேரிடவே அவர்கள் ஆறுபேர்களையும் அநுக்ரஹம் செய்வதற்காக ஆறுமுகத்துடன் ஸ்தன்யபானம் செய்தாராகையால் அவர் ஆறுமுகனானார். ஆகையால் இவரது உத்பத்திக்ரமத்தை விசாரிக்கும்பொழுதே இவருடைய திவ்யசரித்திரங்களை வேதங்களும் புகழ்ந்திருக்கின்றன. வால்மீகிராமாயணம், வாமனபுராணம், ஸ்காந்தபுராணம் முதலியவைகளால் விசதமாகவும் நிரூபிக்கப்பட்டுளது. வால்மீகிராமாயணத்தில் பலவிடங்களில் ஸ்ரீராமசந்திரமூர்த்திக்கு சுப்ரமண்யனையே உபமானமாக சொல்லியிருப்பதை கவனித்தால் ஸ்குகனுக்கு அதிக ஸௌந்தர்யம் உண்டென்றும் அவரிடத்தில் வால்மீகிக்கு அதிக பக்தி உண்டென்றும் தெரிகின்றது. குகனுடைய திவ்யசரித்திரத்தை தெரிந்துகொள்வதற்கு விச்வாமித்ரரை ப்ரச்னம்செய்த ஸ்ரீரகுநாதனுடைய அபிப்ராயமும் கீழ்கண்டபடிதானென்று தெரிகின்றது. விச்வாமித்திரர் குகனுடைய திவ்யசரித்திரத்தை நிரூபித்துவிட்டு கடைசியில் —

धन्यं यशस्यमायुष्यं पुत्रपौत्रसुखप्रदम् ।
यश्शृणोति च काकुत्स्थ सर्वान् कामानवाप्नुयात् ।

என்று குகசரித்திரத்தை படித்தாலும் கேட்டாலும் சகலாபீஷ்டங்களும் சித்திக்கும் என்பதாலும் ஸ்கந்தபக்தியின் மஹிமை புலப்படுகின்றது. அன்றியும் தெய்வபக்திமூலமாகத்தான் நாம் எளிதில் க்ஷேமமடையலாம். பகவானுடைய அநேக மூர்த்திகளில் ஏதாவது ஒரு மூர்த்தியை அவலம்பித்து பக்தி செலுத்த வேண்டும். இப்படி இருக்க சாம்பமூர்த்தியை உபாசிப்பவன் குமாரமூர்த்தி, கணபதி, பார்வதி, நந்தி, சிவகணங்கள் இவைகளுடன் சேர்த்துத்தான் உபாஸிக்கவேண்டுமேயன்றி சிவத்யானபத்ததியில் ஸ்ரீமத் அப்பய்யதீக்ஷிதர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். தவிர இக்கலிகாலத்தில் ஜாதிவேற்றுமை இல்லாமல் சகல ஜனங்களாலும் உபாஸிக்கக்கூடிய தெய்வம் சுப்ரமண்யக்கடவுளேயன்றி வேறு ஒருவருமல்ல. ஆகையால்தான் ஸ்ரீமத் பகவத்பாதாள்

नृणामन्त्यजानामपिस्वार्थदानेगुहाद्दैवमन्यं नमन्ये नमन्ये ।

என்று யாவரும் சுப்ரமண்யக்கடவுளை உபாசிக்கலாமென்றுசொல்லியிருக்கிறார்கள். தற்போது தீராத கர்மவியாதி ஸகல ஜனங்களுக்கும் சுப்ரமண்யஸேவையால்தான் நிவர்த்தியாகிறதென்பது யாவருக்கும் ப்ரத்யக்ஷமே. குகனை நினைத்துக்கொண்டு விபூதியை வியாதியஸ்தர்கள் தரித்துக்கொண்டார்களேயானால் சகல வியாதிகளும் பறந்துபோகுமென்பதில் ஐயமில்லை. வேறு ஆஸ்பத்திரிகளும், டாக்டர்களும்,ஆயுர்வேதவைத்தியர்களும் நமக்கு அவசியமில்லை. ஏழைகளாகிய பக்தர்களுக்கு குமரனுடைய திருநீறே விலையுயர்ந்த மருந்தாம். சுப்ரம்மண்யனுடைய வாகனமாகிய மயிலின் தோகை காற்றின் சம்பந்தத்தாலேயே மகாரோகங்களும் நிவர்த்திக்கும். பொதுவாகவே மயில்தோகையின் காற்றிற்கு அநேக வியாதிகளை நிவர்த்திக்கும் சக்தி உண்டென்பதை நவீன பௌதிகசாஸ்திரநிபுணர்களும் மறுக்கவில்லை. இவ்விஷயத்தையும் ஸ்ரீபகவத்பாதாள்

अपस्मारकुष्टक्षयार्शःप्रमेहज्वरोन्मादगुल्मादिरोगा महान्तः ।
पिशाचाश्च सर्वेभवन्मत्रं वातं विलोक्य द्रुतं तारकारे द्रवन्ते ॥

என்று அந்த சுலோகத்தால் குகமஹிமையையும், மயில் தோகையின் மஹிமையையும் அறிவித்திருக்கின்றார்கள். சிவன், விஷ்ணு இவர்களுக்கு அபிவ்யக்திக்ஷேத்திரம் அநேகமிருப்பதுபோல் குகனுக்கும் அநேக க்ஷேத்திரங்களுண்டு. சுவாமிமலை பழனி, திருச்செந்தூர், குன்னக்குடி, திருத்தணி முதலிய க்ஷேத்திரங்களில் அவருக்கு சாந்நித்யம அதிகம். ஆனால் குகனுக்கு மலைமீதில் வசிப்பதில் அதிகப்பிரியம். சுவாமிமலையில்தான் பரமசிவனுக்கு ப்ரணவோபதேசம் செய்தார். ஆகையால்தான் முருகக்கடவுளுக்கு நிவேதனமானபிறகு சிவபெருமானுக்கு நிவேதனம்செய்வது அவ்வூரில் வழக்கம். சிவபெருமானுக்கும் தத்வோபதேசம் செய்த பெருமையை நிர்ணயம் செய்துகொள்ளும் விஷயத்தில் பிரியவாசகர்களுக்கே பொறுப்பையளித்துவிட்டேன். ஆகையால்தான் இவருக்கு சுவாமிநாதன் என்று பெயர்வாய்ந்தது. யாக்ஞவல்க்ய ஸ்மிருதியிலும் तिलकं स्वामिनस्तथा என்பதாதி வசனங்களால் சுப்ரம்மண்யருடைய பூஜையை வெகுவாய் விரித்திருக்கின்றது. குகனுடைய திருவிளையாடல்கள் அனந்தம். அவையெல்லாவற்றையும் சொற்பகாலத்தில் எடுத்துரைப்பது சாத்தியமல்ல. ஆகையால்தான் காளிதாஸனும் நற்குணம் பொருந்திய க்ஷத்திரியவீர்யர்கள் கதாநாயர்களாக சம்பவிக்குங்காலத்தில் அவர்களை விட்டுவிட்டு குமாரனையே கதாநாயகனாக அமைத்து குமாரசம்பவம் என்ற காவ்யத்தை வரைந்துள்ளார். இதனால் குமாரனுடைய சரித்திரம் வெகு விசித்திரம் என்றும் பரமபாவனமென்றும் அநேகம் பிரயோஜனமுள்ளதென்றும் தெரியவில்லையா? எதற்காக காளிதாஸன் குமாரசம்பவத்தை காவ்யமாக எழுதவேண்டும்? ஆகையால் சுப்ரமண்யன் சர்வதேவோத்தமன் என்ற விஷயம் வேதம் புராணம் ஸ்மிருதி காவ்யம் முதலிய சகல ப்ரமாணசித்தமானதால் அக்கடவுளுடைய திருவடிகளையே தினந்தோறும் போற்றிப்புகழ்ந்து பூஜித்து நீடூழி சுகமாக வாழ்வோமாக.

उपासे हृदयेमन्यचलकुलराजस्यतनया -
स्तनक्षीरापानादिव धवलादिव्याङ्गलतिकम् ।
प्रपन्नार्तिव्रातव्यपनयनमुद्राङ्कितकरं
युवानम् भूमानम् शरवणभवाह्वानमनिशम् ॥

வி. ஜகதீசுவரசாஸ்திரிகள்.

# பழைமையும் புதுமையும்.

ஆர்யகுலத்தில் ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்திரியம் கொடுக்கவில்லை
யென்றுசிலர்ஆரியர்கள்மீதுவீணுகப்பழிகூறுகிறார்கள். எமதார்ய
வம்சத்தில் பிறந்த அரியபொருளாகிய மங்கையர் மணிகளை ஈன
மிருக ஜாதிக்கொப்பாக்கி ஒதுக்கவும் தீராத்துன்பத்துக்காளாக்க
வும் ஆர்யர்களது மனம் ஸாஸமாய் பிரவிருத்திக்காது. இந்த ரக
சியம் தெரியாத சிலர் விதவைகளை அன்னியாயமாய் ஒரு போக
போக்கியத்திற்கு இடங்கொடுக்காமல் கஷ்டப்படுத்திவிட்டதாக
கூச்சலிடுகிறார்கள். மனிதனையும் மிருகமாக்க முயலும் திருத்
தக்காரர்கள் துர்போதனைசெய்து அவர்களைக் கெடுக்கிறார்களா ?
விதவைகளுக்கு ஸந்யாசிகளையொத்த தர்மத்தை வருத்து அதி
னின்று தவறாத ஒழுகிவர விரதாதிகளையும் நியமித்து சதாதனது
கணவனாகிய தெய்வஸ்வரூபத்தைத் தியானித்து மனம் கரைந்து
பிரம்மத்தில் லயித்து முக்தியாகிய பேரின்பத்தை அனுபவிக்கும்
பாக்கியத்தைப் புகட்டும் நம் முன்னோர்கள் கெடுத்தார்களா ?
என்று விசாரணைசெய்து பார்க்கவேண்டும். பேரின்பம் அனுப
விப்பதை விட்டு மீண்டும் உலக வாழ்வாகிய நாகத்தில் வீழ்த்து
வது ஆர்யகுலத்தார்க்கு அழகா? வைதவ்யம் அடைந்த பெண்க
ளுக்கு விதித்த விரதாதி தவங்களை அன்னியாயமென்றும் ஆர்ய
பெரியோர் பெண்கள் விஷயத்திற் செய்த நிபந்தனைகள் பக்ஷபா
தமென்றும் கூறுகிறார்கள். புருஷர்களுக்கு விதிக்கப்பட்ட நான்கு
ஆச்ரமங்களுக்குள் கிரகஸ்தாச்சிரமந் தவிர ஏனைய மூன்றாசிரமங்க
ளும் உங்களறிவிற்கெட்டாமற்போனது மிகவுமாச்சரியமே. அத
னையுமாராய்ந்து பார்த்தால் அவர்களுடைய செய்கைபக்ஷபாதமல்
லவென்றும் அது ஜீவகாருணியமென்றும் அது வஞ்சனையற்ற
செயலேயாமென்றும் புலப்படாதொழியாது. நீதிமான்கள் அப்
படிச்சொல்ல ஒருபோதும் துணியவேமாட்டார்கள். பிரமசரியம்
வானப்பிரஸ்தம் சந்நியாச மென்கிற மூன்றாசிரமங்களின் நிபந்த
னைகளை யோசித்துப்பார்க்கும்போது அவர்கள் பெண்களிடத்தில்
எவ்வளவோ கருணைசெய்திருக்கிறார்களென்று விளங்கும். பெண்
களுக்குக்கணவனிறந்தால்தான் மேற்குறித்தவிரதாதிகள் நியமிக்
கப்பட்டன. இல்லாவிடில் அப்பெண்களுக்குரிய சுகபோகங்கள்

அளவிலடங்கா. ஆடவர்க்கவ்வாறன்று? நான்காசிரமங்களையனுஷ்டித்தே தீரவேண்டும். பிரமசரியத்திலிருந்து பின்னரே கிரகஸ்தனாகவேண்டும். கிரகஸ்தாசிரமம் பிரதானமன்று. எதில்லாவிட்டாலும் பிரமசரியமும் சந்நியாசமுமனுஷ்டித்தே தீரவேண்டும். ஆதலால் பெண்களுக்குமாடவர்க்குமுள்ள நிபந்தனைகளை யோசித்துப்பாருங்கள். புலப்படாவிடினும் உங்களுக்கு நாகரீக ஸ்வீகாரம் கொடுத்தவர்களுமான மேதாவிகளைக் கேட்டுப்பாருங்கள். அவர்களிது பக்ஷபாதமல்லவென்று நிச்சயமாய்க்கூறுவார்கள். அன்றியும் ஆடவர்க்கே அதிக நிர்ப்பந்தமென்பதுந் தெரியவரும். அவ்வாறின்றிப்பருவம் பெற்றபின்னர் விவாகஞ் செய்தாற்றனிக்குற்றங்கள் நேரிடா; பெண்கள் உலகவின்பத்தை அனுபவித்தொழிக்கக்கூடுமாகையால் என்னில் அது மேலே பாலியவிவாகப் பிரகரணத்தில் விரிப்போம். நிற்க, இனி வேறுவகை கூறுவோம் எத்தேசத்து மனிதர்களுக்கும் மன ஆறுதலென்பதொன்று கூறப்படுகிறது. அவ்வாறுதல் எக்காலத்துமில்லாவிடினும் மரணகாலத்திலத்தியாவசியம் வேண்டப்படும். ஆறுதலாவதென்ன? மனதிற்கவலையற்றிருத்தலேயாம். அதாவது யாதொரு அவாவுமற்றிருத்தலாம். அல்லது திருப்தியடைந்திருத்தலாம். மனிதன் உலகப்பொருள்களெதனிடத்துமவாவற்றிருப்பின் அதுவே திருப்தியாம். அது எதனால் வரும் மன அடக்கத்தாலன்றி மற்றெதனாலும் பெறலரிது. உலகவின்பத்தை முற்றும் அனுபவித்தொழிப்பின் பிறகு ஆறுதல் உண்டாகலாமெனின் உண்டாகாது. மேலும் விருப்பம் அதிகமேற்படுமேயன்றிக் குறைபடுதலில்லை. உலகவின்பத்தை அனுபவிக்கும் சக்தி சிறிதுமில்லாதவனுக்குங் கூட அவ்வாறுதலில்லை. எவருக்கும் வெறுப்புற்ற பொருளில் அவாவொழித்தலேயன்றி விரும்பிய பொருளின்கண் ஒழிவுண்டாதலேயில்லை. ஏதேனுமொன்றைப் பிரமாணமாகக் கருதி அதனிடத்தே மாத்திரந் தன் சித்தத்தைச் செலுத்துகிறவனுக்கே மற்றைய பொருள்களில் அவாவொழித்தல் சுபாவம். அவனுக்குத்தான்பற்றியதே பற்றுகக்காண்டலின் கல்வியில் அதிக விருப்பங்கொண்டவனுக்கு அது ஒழிந்த மற்றையவற்றில் விருப்பஞ் செல்லாது. பரோபகாரத்தையே பெரிதாகக்கொண்டவனுக்கு அஃதன்றி ஏனைய பொருள்களாகக் காணப்படா. பெண்ணாசை கொண்டவனுக்கு ஏனைய விரும்பப்படா. பொன்னாசை

கொண்டவனுக்கு வேறுபொருள்கள் உரிமையாகா. மக்களாசை கொண்டவனுக்கும் அவ்வாறேயாம். இதனால் மனம் எப்பொருளில் அதிகமாகப்பற்றி நிற்குமோ அதைவிட்டு ஏனையவற்றை அற்பமாகக் கருதியிகழும் இயற்கையுடையது. மேலும் மேலும் விருப்பத்தை அதிகப்படுத்தும் இயல்புள்ளது. கஷ்டசாத்தியமானவற்றை வெறுக்குந் தன்மையுள்ளது. கண்டதும் கேட்டதுமான எப்பொருளையும் விரும்பும் சுபாவமுடையது. அடைந்தபொருள் எவ்வளவு அரிதாயினும் அதையற்பமாகவும் அடையப்படாதது எவ்வளவு இழிந்ததாயினும் அதனை மகா பெரிதாகக் கருதி வருந்தும் துர்க்குணமுடையது. போனது கருதிப் புலம்பும் புன்மையுள்ளது. இறப்பும் எதிர்நோக்காது நிகழ்பொருளையவாவி வருந்தும் மடமையுள்ளது. பிரபஞ்சப்பற்றின்றித் துயிலுங்காலத்துங் கனவுலகிற்புகுந்து கலங்கும் பிசாசமொத்தது. எவ்வாற்றானுங் கட்டுப்படாத காளையையொத்தது. திருப்தியென்பதொருபோதுமில்லாத திருட்டுத்தனமுடையது. விஷயங்களிற் புகுவதில் வாயுவேகமும் பின்னிட்டுப் போகும்படி முற்பட்டுப்பாயும் வேகமுடையது. சகல தீமைகளுக்கும் ஆதாரமாயுள்ளது. ஆதலாலதனை அடக்கியாளுவதெவர்க்குங் கூடாத விஷயமேயாமாதலால் ஆறுதலெக்காலத்துமில்லையாம். ஆறுதலின்றேல் மரணாந்த காலத்தில் படுங்கஷ்டம் அளவிலடங்காது. அவாவொழிந்தவன் திருப்தியோடும் வருத்தமின்றிச் செல்வான். இஃதெல்லார்க்குமொப்ப முடிந்ததாயினும் எமது முன்னோர்களதனாற் பெருந்துயா மிகுதியென்பது கண்டு அத்துன்பமொழிந்து சுகமுறுதற்கே சன்னியாஸம் முதலிய ஆசிரமங்களை விதித்து உலகப் பொருளிலாசையற்றிருக்குமாறு வெகுகாலம் பயிற்றுவித்தனர். அன்றேல் உலகவாசையொருபக்கத்தும் மரணவாதை ஒருபக்கத்தும் பற்றியீர்ப்பவதனாற் சீவன் படும்பாடு அந்தோ! கூறுதற்கெளிதன்றாம்.

உலகபோகங்களிலாடவரைப் பார்க்கிலும் அதிகப் பற்றுதலும் அதினின்று விலக்குதற்கருமையான சுபாவசித்தம் பெண்களுக்குண்டென்பது சித்தாமாதலால் அவர்களுக்குப் புனர்விவாகம் செய்து மீண்டும் உலகத்தாசையை அளவின்றிப் புகட்டித் தாங்கொண்ணாத பெருந்துன்பத்துக்கிரையாக்குதல் நன்றாகாதென்றுகொள்க. இக் கருத்தினாலேயே பெற்றதைக்கொண்டு திருப்தியடைந்தொழியுமாறு தன் நாயகன் ரூபவானாயினும், குரூ

பியாயினும், தனவானுயினும், தரித்திரனுயினும், யௌவனவானு யினும், விருத்தனுயினும், நற்குணனுயினும், துர்க்குணனுயி னும் அவனையே தெய்வமாக வழிபட்டு அவன் தேடியளித்தது சிறிதாயினும் பெரிதாயினும் உள்ளக்களிப்போடு மனதொத்து உலகவாழ்க்கையை நடத்தி வருக, என்ற விதியும் பிரகாசிக்கின்ற தென்க. இளமைதொடங்கிப் பல்காற்பயிலும் பயிற்சி பசுமரத் தாணியென்ற நிலைபெறுமாதலாலது உசிதமேயாம். தனது நாய கனைவிட வேறு தெய்வமும் பொருளும் போகவஸ்துவுமில்லாமை யால் அவளது மனம் பூரணதிருப்தியடைந்து சுகமுறுவது நிச்ச யமேயாம். ஒருவன் இச்சித்த பொருளையடையாமற்போவானே யானுல் அவனுடைய மனம் படும்பாடும் தான் அதிகப் பிரியம் கொண்டபொருளை இழந்துவிடநேரிடின் அதனுல் அவன் சித்தம் பரிதபிப்பதும் அளவுபடாதென்பது சொல்லவும் வேண்டுமோ? அங்ஙனமாயின் போகத்தை மறந்தும் புவியில் வசிப்பது கூடா மையாமேயெனின் அதற்கென்றே சந்நியாஸிகள் பிரமசாரிகட்கு விதிக்கப்பட்டவாறு ஜபம் தபம் தியானம் விரதம் முதலிய வேறு வேலைகள் அவர்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனவென்க இதனுற் பெண்டிறந்த புருஷனுக்கும் புருஷனையிழந்த பெண்ணுக்கும் விதி ஒரே தன்மையாதலால் காணப்பெறின் எமது பெரியோரை வஞ்ச கரென்று தூஷிக்கும் வாய் மௌனஞ் சாதிக்குமென்க. புருஷ ருக்கு மறுமணஞ்செய்ய விதியுளதேயெனின், அது கட்டாயவிதி யன்றென்பதும், மணஞ்செய்வதும் அவர்களுக்கவசியமன்றென் பதும், மணம் புரியினும் பெண்களை ஒப்பப் பெருந்தீமைக்காளா கார்களென்பதும் வேறிடத்திலுளது.

ஆயினும் பாலியத்திற்புருடனையிழந்த பெண் மறுமணம் புரிந்துகொண்டு மேல்குறித்தவாறு கற்புடைமை தவருதொழுகின் நன்மையடைதல் கூடாதோவெனின் கூடாதென்றொழிக. தன துடலாவியாதிகளை முதலிலொருவனுக்குச் சுதந்திரமாக்கியபின் னர் மற்றவனுக்குஉரிமையாக்குதலேவிபசாரமாமென்றுகொள்க. நோக்கத்தாலும் ஸ்பரிசத்தாலும் எண்ணத்தாலும் விபசாரமுண் டாவதியல்பென்று வேறிடத்தில் கூறினேமாதலால் அதனை மீண்டு ஞாபகத்துக்குக் கொண்டுவருக. களங்கமில்லாத இளம் பருவத்துப்பெண் மணம்புரியுங்காலத்தே தனது நாயகனது சரீர குணம் அவனது ஸ்பரிசசம்பந்தத்தாலெய்துபெறுமென்க. அதற்

கென்றே பாலியவிவாகம் விதிக்கப்பட்டதுமாம். அது பாலிய விவாகப் பிரசங்கத்தில் விரிக்கப்படும். பாலப்பருவத்தில் மனதிற் பதிந்ததை மாற்றுதலரிதென்று கூறினோம். பின்னர் மணம்புரிபவனை ஆசைநாயகனெனக் கருதினும் முதற்கணவன் மாட்ட வாவொழியாதாம். இருவரைக் கருதுதல் விபசாரமேயாம். ஸ்பர்சாதி சம்பந்ததோஷமில்லாவிடினும் மனச்சம்பந்தத்தால் குற்றப் படுவது நிச்சயம். விபசாராதி தோஷங்களுக்கும் திருட்டு பொய் வஞ்சனையாதி தோஷங்களுக்கும் மனமே காரணமாகுமென்பது உண்மையன்றோ? ஒருதரம் ஒரு குற்றத்திற்புகுந்த நெஞ்சம் மேலும் மேலும் அதனை விருத்தியாக்குவதேயன்றிக் குறைவுபடுதல் அதன் இயற்கையன்றாதலால் பிழைபடுமென்றே கருதுக. அவ்வாறாயின் மறுமைப்பயனறவே கெடுமென்க. இம்மைச்சுகமுமீட்டழியுமென்க. மனைவிக்கு கணவனும் கணவனுக்கு மனைவியுமியற்றவேண்டிய வைதிககருமங்களெல்லாம் அடியோடொழியும் என்பதுங்காண்க. ஒழியவே அச்சம்பந்தம் மிருகசம்பந்தமாவதேயன்றி மானிடவியற்கையாகாதென்க. இளமைப்பருவத்தில் வைதவ்யம் பெற்ற பெண்கள் விபசாரம் புரிந்து பல தீமைக்காளாதல் கண்டோமாதலால் அத்தீமை விலகும்பொருட்டு மறுமணம் புரிதலவசியமாமெனின் கஞ்சா குடிப்பதும், கட்குடிப்பதும் போல இரண்டுமொரே துலைபெற்று உயர்வு தாழ்வின்றி நிற்றலாலும் ஆரியாது நோக்கத்துக்கு விரோதமேயாதலாலும் அதனாற் பெறும் பயன் யாதுமின்மையாலும் ஆரியர் குழாத்துள்ளும் ஆரியர் சாஸ்திரங்களாலும் இகழ்ச்சி பெறுதலாலும தகுதியன்றென்றொழிக. அன்றியும் ஆரியர் கூட்டத்தினின்றொதுக்கி அனாரியரோடினப்படுத்தப்படுதலாலும் ஆகாதென்க. மறுமணம் புரிதலும் விபசாரதோஷம் பெறுதலும் ஒருதன்மைத்தாதலால் மறுமணம் புரிதலைவிட விபசாரமே மேலானதென்க. வியபிசாரம் எங்குமுண்டாவதில்லை. நிர்ப்பந்தமிகுதியால்விபசாரத்தில்பொருட்செலவு முதலிய நஷ்டமின்மையால் ஒருகாலத்துத்தவறி விபசாரஞ்செய்தார்க்குப் பிராயச்சித்தத்தாற் பரிசுத்தப்படுத்திச் சேர்க்கும் ஓர் விதி சிறுபான்மை வழங்கப்படுதல்போல அதற்கெஞ்ஞான்றுமில்லையாலும் மறுமணம் நன்றென்க. மறுமணம் விதித்துப் பொருளாதி நஷ்டம் உறுதலைப்பார்க்கிலும் விவாகமென்பதையறவேயொழித்துச் சுயேச்சையாய்த் திரியவிடுதல் மிகுதி

யும் நன்றுமென்க. ஆரியர் கருத்துக்கு விரோதமாய் நிற்பவர் அவர்களது கொள்கையைச் சிறிது தழுவுதல் பெரிய வஞ்சனை யென்றே நல்லோராற் கருதப்படுதலால் முற்றும் மாறுபட்ட சுயேச்சாவிதி யேற்படுத்தப்படின் அது வஞ்சனையாகக் கருதப் படாமல் அவர்களபிப்பிராயமவ்வாறென்று கழிக்கப்படுதலின் நன்றேயாமென்க. இதுகாறும் யாங்கூறியவாற்றாற் பெண்க ளுக்கு மறுமணம் புரிதலெவ்வாற்றானும் பொருந்தாது என்று விலக்குக.

கலியன்:— வைதிகரே! அதிக பாலியவயதிற் பெண்களுக்கு விவாகஞ்செய்வது எவ்வகையிலும் ஒத்ததாயில்லை. உலகவிவகார மின்னதென்றறியாத அவ்வளவு இளமையிலே தானே விவாகஞ் செய்வதனாற் பயனென்ன? குடும்பபாரத்தை வகித்து நடத்தக் கூடுமோ? கணவனுக்குத்தான் ஏதேனுமுபகாரமுண்டா? பெண் ணுக்குத்தான் சுகமுண்டா? அதனாலன்றோ பால்யவிதவைகளதிக மாக நம் தேசத்திற் காணப்படுகிறார்கள்? பருவகாலம் வந்தபின் விவாகஞ்செய்வதால் சிறிது சுகமுண்டாமே? விவாகம் புரிந்தும் உலகவின்பத்தைச் சிறிதுமனுப்வியாமல் ஆயுள்பரியந்தம் கஷ்டப் படவிடுத்தல் நியாயமாகுமோ? பருவம்வந்துவிவாகஞ்செய்வதாற் கெடுதியொன்றுமில்லையே? அப்படிச்செய்வதால்வைதிகவிதிகட்கு மாறுபடாதே? சாஸ்திரங்கட்கும் சம்மதமென்றுதோன்றுகிறதே. அப்படியிருக்க அது கூடாதென்கிற கட்டுப்பாடு அவமதிக்கத் தக்கதுதான்.

வைதிகன்:— ஐயா கலிபுருஷரே! சற்று கவனியும். பருவம் வந்த பின்னர் விவாகம் புரிவது தேசாந்தரவழக்கத்தையனுஸ ரித்து உமக்கு நியாயப்படினும் அவ்வளவு உசிதமாகத் தோற்ற வில்லை, எமதுபெரியோர்கொண்ட கருத்துக்கதுவேதகும். தேசாந் தரத்தார் கொள்கைப்படி அவர்களுக்கு அது நியாயந்தான். ஆரியதேசத்துக்கு ஆரியர் கொள்கை சரியாயிருக்குமேயன்றி மற்றது சிறிதுமொவ்வாது. ஏனெனில் ஆரியர்களது நோக்கம் முற்றும் மறுமையைக் குறித்ததேயன்றி இம்மைச்சுகத்தைமட் டும் கருதியதன்று என்று முன்னரே கூறினோமல்லவா?

(தொடரும்)

வைதிகன்.